# தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - சமத்துவ மக்கள் கழகம் பேச்சுவார்த்தை!



2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று (2.3.2026) அண்ணா அறிவாலயத்தில் சமத்துவ மக்கள் கழகத் தலைவர் எர்ணாவூர் நாராயணன் தலைமையில் பொருளாளர் எம்.கண்ணன், இளைஞர் செயலாளர் கார்த்திக் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

# தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - மூவேந்தர் முன்னேற்றக் கழகம் பேச்சுவார்த்தை!



2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று (2.3.2026) அண்ணா அறிவாலயத்தில் மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் ஸ்ரீதர் வாண்டையார் தலைமையில் அமைப்புச் செயலாளர் ஜி.எம்.ஆர்.வைபவ் வாண்டையார், ஆட்சிமன்றச் செயலாளர் நம்பிவயல் ரவீந்திரன், மாநிலத் துணைத் தலைவர் டி.விப்ர நாராயணன் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

# தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - மக்கள் விடுதலைக் கட்சி பேச்சுவார்த்தை!



2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று (2.3.2026) அண்ணா அறிவாலயத்தில் மக்கள் விடுதலைக் கட்சி நிறுவனத் தலைவர் கே.முருகவேல் ராஜன் தலைமையில், பொதுச் செயலாளர் ஏ.ராஜி, செயல் தலைவர் என்.அபி சுரேஷ், அமைப்புச் செயலாளர் சி.சரவணன், துணைப் பொதுச் செயலாளர் ஆர்.செல்வகுமார் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

### எதைக்கண்டு பா.ஜ.க. அரசு அஞ்சுகிறது? ஒதுக்கப்பட்ட நிதி வீணாகும்!

# அகழ்வாராய்ச்சிக்கு ஒப்புதல் வழங்குங்கள்! கீழடி பேசட்டும்; வரலாறு மேலெழட்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, மார்ச் 3–

**எதைக்கண்டு பா.ஜ.க. அரசு அஞ்சுகிறது என்றும், ஒதுக்கப்பட்ட நிதி வீணாகுமே என்றும், அகழ்வாராச்சிக்கு ஒப்புதல் வழங்குங்கள், கீழடி பேசட்டும், வரலாறு மேலெழட்டும் என்றும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

கீழடி பேசட்டும், வரலாறு மேலெழட்டும்!

கீழடி, ஆதிச்சனூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட எட்டு இடங்களில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசிடம் உடனடி ஒப்புதல் வேண்டித் தமிழ்நாடு அரசு கடிதம் அனுப்பி 8 மாதங்கள் ஆகின்றன. இதற்கான முன்மொழிவுகள் ஜூலை 2025இல் அனுப்பப்பட்டு, நவம்பரில் இந்தியத் தொல்லியல் துறையின் தலைவர் தலைமையிலான கூட்டத்திலும் அது எடுத்துக்கொள்ளப்பட்டது. இருந்தும், 8 மாதங்களாகியும் ஒப்புதல் கிடைக்கவில்லை. மீண்டும் மீண்டும் நாங்கள் கோரிக்கை வைக்கிறோம். மீண்டும் மீண்டும் அது கண்டுகொள்ளப்படாமல் இருக்கிறது.

தமிழ்நாட்டில் அகழ்வாராய்ச்சியை மேற்கொள்வதற்கு உகந்த காலம் என்பது ஜனவரி முதல் ஜூலை வரைதான். இதைத் தவறவிட்டால், பருவமழையினால் களப்பணிகள் தடைபடும், முக்கிய ஆராய்ச்சிகள் தாமதமாகும், 20252026ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியும் வீணாகும்.

நான் கேட்க விரும்புவது... ஏன் இந்தத் தயக்கம்? தமிழ் நாகரிகத்தின் தொன்மை என்பது இந்தியாவுக்கு ஊறு விளைவிப்பதல்ல; இந்தியாவின் நாகரிகப் பண்பாட்டுக்குப் பெருமை சேர்ப்பது. எதைக் கண்டு பா.ஜ.க. அரசு அஞ்சுகிறது? அகழ்வாராய்ச்சிக்கு ஒப்புதல் வழங்குங்கள், வரலாறு பேசட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! மா.ஜெய்சங்கர் தலைமை!

# துறைமுகம் மேற்குப்பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு மாபெரும் புகழரங்கம்!

## ப.சிதம்பரம் எம்.பி, கு.சுப்புராயன் எம்.பி – கம்பம் செல்வேந்திரன் வாழ்த்துரை!

சென்னை, மார்ச்.3–

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், துறைமுகம் மேற்குப்பகுதியில், மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு ”மனிதநேய விழா–31, எனும் தலைப்பில், மாபெரும் புகழரங்கம் 04.03.2026, புதன்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, தங்கசாலை தெரு, அரசு அச்சகம் அருகில் நடைபெறுகிறது.

இப்புகழரங்கத்தில் 54வது வட்ட கழக செயலாளர் மா.ஜெய்சங்கர் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, திரு.தயாநிதிமாறன் எம்.பி, எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், ப.ஸ்ரீராமுலு, இசட்.ஆசாத் எம்.சி, என்.பி.எம்.சேக்அப்துல்லா, ஆர்.கலைச்செல்வி, எம்.இப்ராஹிம் கனி, பா.ஜெகதீஷ், எம்.வினாயகம், பி.விஜயகுமார், பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், நா.ரஞ்சித்விஜயாலயன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மே.ஜனார்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துகுமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சமி, சி.ப.ஜெயராமன், எஸ்.ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுஐர, டி.சதீஷ்குமார், சேப்பாக்கம வே.பா.பிரபாகரன், எல்.சத்தியநாராயணன், எம்.பரத்குமார், ராஜா(எ) கதிரவன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், ஆ.நா.பார்த்திபன், கே.கவியரசு, லண்டன்க.முருகன், ஜி.மாசிலாமணி, எம்.வி.ஆர்.சரவணக்குமார், எல்.எழில் அரசு, பி.ரவி, எஸ்.பாலு 9எ) பாலசுப்பிரமணி, எஸ்.எம்.எழில், எம்.பத்மினி, ஆர்.அரிகிருஷ்ணன், க.பிரவீன்குமார், என்.பாலாஜி, ஜெ.ஜெகன், என்.கே.எஸ்.விஜய், டி.ராஜேஷ், மதுரை எம்.சரவணன், மா.பொன்முடி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி, மாநில கட்டுப்பாட்டு குழுத்தலைவர், சி.பி.ஐ – திரு.கு.சுப்புராயன் எம்.பி, கழக தேர்தல் பணிக்குழுச் செயலாளர் – திரு. கம்பம் செல்வேந்திரன் ஆகியோர் வாழ்த்துரைக்கின்றனர்.

மேலும் இப்பொதுக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியாராஜன், தாயகம் கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன் Ex.MLA, கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன்பிரன்னா எஸ்.மணிமுடி பி.கே.மூர்த்தி வே.உமாகாந்த் கே.எஸ்.எம்.நாதன் கே.சந்துரு சங்கரிநாராயணன் மாவட்ட கழக நிர்வாகிகள் : கோ.ஏகப்பன் தேவஜவகர் புனிதவதி எத்திராசன் எம்.சி பகுதி கழக செயலாளர்கள் சொ.வேலு MC வி.சுதாகர் ஐ.சி.எப்.முரளிதரன் எ.நாகராஜன் டி.எஸ்.பி.ராஜகோபால் MC எம்.டி.ஆர்.நாகராஜ் செ.தமிழ்வேந்தன் எம்.சாமிகண்ணு வே.வாசு எம்.சி கூ.பி.ஜெயின் MC பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி எஸ்.பன்னீர் செல்வம் டி.வி.செம்மொழி பி.ஜெ.துளசிங்கம் சாவித்திரிவீரராகவன் அ.நிர்மலாதேவி பி.உதயசங்கர் உமேஷ் (எ) நீலகண்டன் டாக்டர் எ.பி.பூர்ணிமா மாவட்ட பிரதிநிதிகள்: டி.எஸ்.சேகர் வி.எம்.முருகவேல் எம்.நாராயணன் எஸ்.கதிர்வேலு ஏ.பி.எஸ்.செந்தில்குமார் வி.அசோக்குமார் பூக்கடை எம்.முரளி வி.சங்கர் எம்.சுரேஷ் சேகர் [எ] பிரஸ்சேகர் ஆர்.தங்கமணி வீடியோ.கே.சம்பத் சகாயராஜ் ஹாஜி எம்.மாணிக்கம் எ.மதுசூதனன் பி.ஜி.சுகுமார் டி.சுபாஷ்சந்திரபோஸ் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் / துணை அமைப்பாளர்கள் சி.மகேஷ்குமார் வானவில் விஜய் நா.துலுக்காணம் ஜெ.பாலமுருகன் புரசை ஜி.தாமோதரன் எல்.பி.எப்.மோகன் டி.பெரோஸ்கான் சுதா தீதையாளன் MC டாக்டர் ஜி.சாந்தகுமாரி MC டி.லோகேஷ் கே.கோகுல் ஆர்.எஸ்.சித்திக் பா.ஜெகதீஸ் துரைகண்ணன் ராஜேஸ்வரி ஸ்ரீதர் ஜி.வி.நாகவள்ளி MC மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன் நன்றி கூறுகிறார்கள்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு

# தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியன் - பிறந்தநாள் வாழ்த்து!

## சங்க நிர்வாகிகள் அறிக்கை!

சென்னை, மார்ச் 3

தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியன் முதல்வருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து – அவ்வமைப்பின் தலைவர் ஆர்.சந்திரிகா, செயல் தலைவர் பெ.வஜ்ஜிரவேல், பொதுச்செயலாளர் ஆர்.கதிரவன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

எளிய மக்களின் குரலாய் திட்டங்கள் மூலம் தினம் தினம் மக்களைச் சந்திக்கும் தன்னிகரில்லாத் தலைவனாய் திராவிடப் பாசறையின் பெரும் புகழ்யாத்து நின்று ஐந்து ஆண்டுகளில் அழகு தமிழில் திட்டங்கள் வகுத்து அரசியலில் தனக்கென தனி அடையாளத்தையும், இடத்தையும் பிடித்து பகைவர்க்கும் ‘அருள்வாய் நன்நெஞ்சே’ என்பதை நிரூபித்துக் காட்டும் நிகழ்காலச் சூரியனாய்த் திகழும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பெரும் புகழ் தமிழ் நிலத்தில் தமிழ் உள்ள அளவும் நிலைத்திருக்க அவர் பிறந்த இந்த இனிய நாளில் தென்னிந்திய பத்திரிகையாளர்கள் யூனியன் வாழ்த்தி மகிழ்கிறது.

இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட

# தி.மு.க. வழக்கறிஞர் அணி உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் !

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிக்கை!

சென்னை, மார்ச் 3-

கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி., விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று 3.3.2026 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணி அளவில், சென்னை, தேனாம்பேட்டை, அண்ணா அறிவாலயம் “கலைஞர் அரங்கத்தில்” சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை அவர்கள் தலைமையில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் துணைச் செயலாளர்கள் தலைமைக் கழக வழக்கறிஞர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

அதுபோது சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: எதிர்வரும் சட்டப்பேரவை பொதுத் தேர்தல் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### சட்டமன்றத் தேர்தல் :

# 11 வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் ஏராளமான கழகத்தினர் திரண்டனர்!







சென்னை, மார்ச். 3 -

சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது.

11 வது நாளாக நேற்று (2.3.2026) கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களைப் பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தையை தொடங்கி உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த 20ஆம் தேதி அன்று தொடங்கியது.

11வது நாளான நேற்று (02.03.2026) அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், அண்ணா அறிவாலய மேலாளர் ஆர். பத்மநாபன். கழக தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி. செல்வராஜ், கழக இலக்கிய அணி இணைச் செயலாளர் ஈரோடு இறைவன் ஆகியோர் பெற்றனர். அப்போது கழகத்தினர் ஏராளமானோர் விருப்ப மனுக்களை அளித்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்த வரையில் 234 தொகுதிகளுக்கும் பெறப் படுகிறது.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக திரண்டு வந்து விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் வருகிற மார்ச் 6ஆம் தேதி வரை நடை பெறுகிறது.